**சுருக்கம்**

பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – புள்ளியியல் ஆய்வாளர் பணியிடத்தினை புள்ளியியல் அலுவலர் பணியிடமாக தரம் உயர்த்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 21**

**நாள்: 09.07.2018**
**விளம்பி – ஆனி, 25**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் கடித எண் 28524/சி1/2016, நாள் 10.11.2016. (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு முகவரியிடப்பட்டது.)
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1528/நிர்.1/2015, நாள் 17.11.2016, 20.02.2017 மற்றும் 18.12.2017.

----------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் பரிந்துரையின்படி, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தில் காலியாக உள்ள புள்ளியியல் ஆய்வாளர் பணியிடத்தினை, புள்ளியியல் அலுவலர் பணியிடமாக தரம் உயர்த்தக் கோரி அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்துள்ளார்.

2. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தில் குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,900/– (நிலை–18 ரூ.36,900–1,16,600/–) எனும் ஊதிய விகிதத்தில் காலியாக உள்ள புள்ளியியல் ஆய்வாளர் பணியிடத்தினை, குறைந்தபட்ச ஊதியம் ரூ.37,700/– (நிலை–20 ரூ.37,700–1,19,500/–) எனும் ஊதிய விகிதத்தில் உள்ள புள்ளியியல் அலுவலர் பணியிடமாக தரம் உயர்த்தப்படுகிறது.

(ii) மேலும் தற்போதைய அவசியத்தினை அடிப்படையாகக் கொண்டே புள்ளியியல் ஆய்வாளர் பணியிடத்தை புள்ளியியல் அலுவலர் பணியிடமாக தரம் உயர்த்தப்படுகிறது. மேற்படி பணியிடம் காலியிடமானாலோ அல்லது எதிர்காலத்தில் போதிய புள்ளியியல் ஆய்வாளர் பணியிடம் இருந்தாலோ மேற்படி பதவியினைத் தரம் இறக்கிட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

[த.பி.பா.]

3. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண் 32888/நிதி(சந)/2018, நாள் 04.07.2018 மற்றும் அலுவல்சாரா எண் 35195/மைமஆபி/நாள் 06.07.2018 பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
பொருள் இயல் மற்றும் புள்ளியில் துறை, சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

அரசுச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந./சி.எம்.பி.சி.)துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்